செய்தி வெளியீடு எண் : 1338 நாள் : 08.07.2023

# செய்தி வெளியீடு

## தமிழ்நாடு மின்சார வாரியத்தில் முறைகேடுகள் நடந்ததாக வந்த புகார் மனுவிற்கான விளக்கம்.

அனைத்து ஒப்பந்த புள்ளிதாரர்களும் ஒரே விலைப்புள்ளியை குறிப்பிட்டுள்ளதால், மின்மாற்றிகள் கொள்முதல் செய்ததில் முறைகேடுகள் நடைபெற்றதாக புகார் கூறப்பட்டுள்ளது.

2. தமிழ்நாட்டில் ஏறக்குறைய 30–க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மின்மாற்றிகளை விற்பனை செய்து வருகின்றன. கடந்த 2011–ம் ஆண்டு முதல் மின்மாற்றிகள் கொள்முதல் செய்யப்பட்ட கோப்புகளை பரிசீலனை செய்ததில் பெரும்பாலான நேரங்களில் நிறுவனங்கள் ஒரே விலைப்புள்ளியை சமர்ப்பித்துள்ளது தெரிய வருகிறது. அதன் விவரம் வருமாறு,

| Sl No | Capacity | Spec No | No of firms Participated | No of Firms quoted the same rate |
|---|---|---|---|---|
| 1 | 500/11 | M25/11-12 | 20 | 17 |
| 2 | 100/22 | M19/11-12 | 36 | 26 |
| 3 | 250/11 | M39/11-12 | 33 | 24 |
| 4 | 100/11 | M34/12-13 | 34 | 26 |
| 5 | 500/22 | M02/13-14 | 13 | 13 |
| 6 | 100/11 | M27/13-14 | 34 | 32 |
| 7 | 200/22 | M32/13-14 | 25 | 23 |
| 8 | 250/11 | M27/14-15 | 45 | 28 |
| 9 | 250/11 | M-54/17-18 | 36 | 16 |
| 10 | 63/22 | M-56/17-18 | 31 | 12 |
| 11 | 63/11 | M-55/17-18 | 27 | 9 |
| 12 | 63/11 | M-38/19-20 | 40 | 11+13* |
| 13 | 100/11 | M-36/19-20 | 44 | 12+21* |
| 14 | 250/11 | M-43/20-21 | 35 | 1+34 |
| 15 | 25/11 | M-35/20-21 | 34 | 34 |

| | | | | |
|---|---|---|---|---|
| 16 | 100/22 | M-01/20-21 | 33 | 15+2* |
| 17 | 200/22 | M-02-20-21 | 37 | 13+14* |
| 18 | 250/11 | M-08/21-22 | 34 | 34 |
| 19 | 500/11 | M-11/21-22 | 26 | 26 |
| 20 | 100/11 | M-13/22-23 | 31 | 1+30 |

**(* நிறுவனங்கள் இரு கூறுகளாக பிரிந்து ஒவ்வொரு பிரிவும் ஒரே மாதிரியான விலையை அந்தந்த கூறுகளில் கோரியுள்ளது)**

3. மின்மாற்றிகள் தயாரிக்கும் அனைத்து நிறுவனங்களும், சென்னையிலிருந்து நாகர்கோவில் வரை உள்ள 44 மின் பகிர்மான வட்டங்களுக்கு மின்மாற்றிகளை எடுத்து சென்று வழங்குவதால், அவை சரக்கு வாகன கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. மேலும், மேற்காணும் நிறுவனங்கள் உள்ளூரிலேயே பல வருடங்களாக இயங்கி வருவதால், அவர்களுக்கு மற்ற நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் குறித்து தெரிய வாய்ப்புள்ளது.

4. ஒப்பந்த விலைப்புள்ளிகள் அனைத்தும் கணினி மூலமாகவே பெறப்படுகிறது. எனவே, ஒன்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் ஒரே விலைப்புள்ளியை சமர்ப்பித்திருந்தாலும், தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி வெளிப்படைத்தன்மை சட்டம்–1998 (Tamil Nadu Tender Transparency Act 1998), விதி எண்.10(5)–ன்படி தமிழக மின்வாரியத்திற்குத் தேவையான மின்மாற்றிகளை தகுதி வாய்ந்த அனைத்து சிறு, குறு நிறுவனங்களுக்கும் பிரித்து வழங்கி மேற்படி விதிகளின் படி கொள்முதல் ஆணை அளிக்கப்பட்டுள்ளது.

5. மின்மாற்றி தயாரிக்கும் நிறுவனங்கள் ஒரே மாதிரி விலைப்புள்ளி கோருவது கடந்த இரு ஆண்டுகளில் நிகழும் நிகழ்வுகள் அல்ல. இந்த நடைமுறை, கடந்த 10 வருடங்களுக்கும் மேலாகவே பின்பற்றப்பட்டு வருகிறது.

6. மேலும், ஜெம் போர்டலில் குறிப்பிட்ட விலையை விட அதிக விலைக்கு மின்மாற்றிகள் வாங்கியுள்ளதாக புகாரில் கூறியுள்ளது. ஒப்பந்த புள்ளிகளை பரிசீலனை செய்யும்போது அன்றைய தேதியில் தமிழ்நாடு மின்சார வாரிய விவரக் குறியீடுகளுடன் பெரும்பான்மையான விவரக் குறியீடுகளுடன் ஒத்து வரும் ஜெம் போர்டல் விவரக் குறியீடுகள் கொண்ட விலையை ஒப்பிட்டுத்தான் ஒப்பந்த புள்ளி வழங்கப்படுகிறது. ஆனால், இன்றைய தேதியில் ஜெம் போர்டல்விலையை எடுத்து ஒப்பீடு செய்துள்ளது சரியான நடைமுறையாகாது.

7. தமிழ்நாடு மின்சார வாரியம் கொள்முதல் செய்த விலை விவரங்களும், ஜெம் போர்டல் விலை விவரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| Sl.No | Spec. No | Capacity of DT | Awarded rate | Qty in Nos | Costing rate arrived in Rs. | GeM Portal rate in Rs. | Diff of awarded rate and GeM rate | Diff % with GeM |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | M.14/ 22-23 | 200KVA/ 22KV | 672582 | 1000 | 833438 | 685058 (31.1.23) | -12476 | -2 |
| 2 | M.13/ 22-23 | 100KVA/ 11KV | 413590 | 3750 | 527168 | 405000 (19.10.22) | 8590 | 2 |
| 3 | M.12/ 21-22 | 100KVA/ 22KV | 446040 | 2500 | 422340 | 430438 (7.2.22) | 15602 | 4 |
| 4 | M.11/ 21-22 | 500KVA/ 11KV | 1249800 | 800 | 1196631 | 1193873 (27.1.22) | 55927 | 5 |
| 5 | M.10/ 21-22 | 63KVA/ 22KV | 318100 | 7000 | 327945 | 305476 (27.1.22) | 12624 | 4 |
| 6 | M.09/ 21-22 | 63KVA/ 11KV | 296860 | 10000 | 287490 | 301428 (27.1.22) | -4668 | -2 |
| 7 | M.08/ 21-22 | 250KVA/ 11KV | 729600 | 2000 | 749509 | 675812 (2.1.22) | 53788 | 8 |

8. புகாரில் மற்ற மாநிலங்களோடு மின்மாற்றிகளின் கொள்முதலை ஒப்பீடு செய்து ரூ.397.37 கோடி இழப்பு ஏற்பட்டதாக கூறியுள்ளது. புகாரில் மின்மாற்றிகளின் வேறுபட்ட விவரக் குறியீடுகளின் அடிப்படையிலும், வேறுபட்ட மூலப்பொருட்களின் அடிப்படையிலும் உதாரணமாக காப்பர் மின்சுருள் கொண்ட மின்மாற்றிகளோடு ஒப்பிடு செய்யாமல் அலுமினியம் மின்சுருள் கொண்ட மின்மாற்றிகளோடு ஒப்பீடு செய்துள்ளது. மேலும், கீழ்கண்ட காரணங்களினால் புகாரில் நிர்ணயம் செய்த விலையானது தவறாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1. **புகாரில் ஜெம் போர்ட்டல் விலையை ஜூன், 2023–ம் மாதத்தில் கணக்கில் கொண்டுள்ளது. மின்சார வாரியம் ஒப்பந்த புள்ளிகளை பரிசீலனை செய்யும் காலத்தில் மின்சார வாரியத்தின் விவர**

   **குறியீட்டுடன் ஒத்து வரும் ஜெம் போர்டல் விலையுடன் ஒப்பீடு செய்யப்பட்டு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.**
2. **புகாரில் மின்மாற்றிகளின் விலையை கணிக்கும்போது அலுமினிய மின்சுருள் பயன்படுத்தப்படும் மின்மாற்றிகளின் விலையை அடிப்படையாக வைத்து, 25 சதவீதம் விலையை அதிகரித்து தாமிர மின்சுருள் பயன்படுத்தப்படும் மின்மாற்றிகளின் விலையோடு ஒப்பீடு செய்திருப்பது தவறானதாகும்.**
3. **அலுமினிய மின்சுருளை விட தாமிர மின்சுருள் விலை மூன்று மடங்கு அதிகமாகும். அலுமினியம் மின்சுருள் உபயோகிக்கும் மின்மாற்றிகளின் விவர குறியீடுகளும் காப்பர் மின்சுருள் உபயோகிக்கும் மின்மாற்றிகளின் விவர குறியீடுகளும்**

**வெவ்வேறானவை. மேலும், இரு மின்மாற்றிகளின், ஆயுட்காலம், பழுது விகிதம் ஆகியவற்றை ஒப்பிடும்போது, காப்பர் மின்மாற்றிகளின் தரம் மிகவும்அதிகம் மற்றும் இதன் ஆயுட்காலம் 25 முதல் 30 ஆண்டுகள் வரை அதிகமான பழுதுகள் இன்றி இயங்கக்கூடியது.**

4. **புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள கேரளா மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் கொள்முதல் செய்யப்படும் மின்மாற்றிகள் மூன்று வருடகால உத்திரவாதத்துடன் மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் மின்மாற்றிகள் ஐந்து வருடகால உத்தரவாதத்துடன் கொள்முதல் செய்யப்படுகிறது. மேலும், தமிழ்நாடு மின்சார வாரியம் கொள்முதல் செய்யும் மின்மாற்றிகளின் உத்தரவாத காலம், பணம் செலுத்தும் கால அளவு, கொதிநிலை ஏற்புத் திறன் அளவு, காப்பர் மின்சுருள் அளவு போன்ற காரணிகளால், மற்ற மாநிலங்களில் கொள்முதல் செய்யும் மின்மாற்றிகளின் விலைகளோடு ஒப்பிட இயலாது.**
5. **தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஒரே நிறுவனமாக இயங்குவதால் தமிழ்நாடு முழுவதும் உள்ள 44 மின் பகிர்மான வட்டங்களுக்கும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மின்மாற்றிகளை கொண்டு செல்ல வேண்டியுள்ளதால், அதற்குண்டான செலவையும் கொள்முதல் விலையுடன் சேர்த்து குறிப்பிடப்படுகிறது.**
6. **மின்வாரிய Cost Data–வில் உள்ள விலை ஒப்பந்த புள்ளி நிர்ணயம் செய்யும் காலத்திற்கு ஏற்ப திருத்தம் செய்யப்படவில்லை. ஒப்பீடு செய்யப்பட்ட மாநில**

**மின்வாரியங்களின் தொழில் நுட்ப குறிப்புகளை விட தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக தொழில்நுட்ப குறிப்புகள் மேம்பட்டு உள்ளன.**

9. மேலும், தெரிவித்துள்ள புகார்களுக்கு விரிவான விளக்கம் இணைப்பில் வழங்கப்பட்டுள்ளது.

10. மேலும், புகாரில் கூறியவாறு அனைத்து நிறுவனங்களும் ஒரே விலைப்புள்ளியை சமர்ப்பித்தாலும், அந்நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து, அந்நிறுவனங்கள் வழங்கிய விலைப்புள்ளியைக் காட்டிலும் தோராயமாக ரூ.50,000 வரை விலைகுறைப்பு செய்துதான் அந்நிறுவனங்களிடமிருந்து மின்மாற்றிகளை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

11. திராவிட முன்னேற்ற கழக அரசு, எந்த நிலையிலும், முறைகேடுகள் நடைபெறுவதை அனுமதிக்காது. ஆகவே, மின்மாற்றிகள் கொள்முதலில் புகாரில் கூறியவாறு எவ்வித முறைகேடுகளும், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நடைபெறவில்லை என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

# இணைப்பு

புகாரில் அனைத்து ஒப்பந்த புள்ளிதாரர்களும் ஒரே விலைப்புள்ளியை குறிப்பிட்டுள்ளதால், மின்மாற்றிகள் கொள்முதல் செய்ததில் முறைகேடுகள் நடைபெற்றதாக கூறியுள்ளது.

2. தமிழ்நாட்டில் ஏறக்குறைய 30–க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மின்மாற்றிகளை விற்பனை செய்து வருகின்றன. கடந்த 2011–ம் ஆண்டு முதல் மின்மாற்றிகள் கொள்முதல் செய்யப்பட்ட கோப்புகளை பரிசீலனை செய்ததில் பெரும்பாலான நேரங்களில் நிறுவனங்கள் ஒரே விலைப்புள்ளியை சமர்ப்பித்துள்ளது தெரிய வருகிறது. அதன் விவரம் வருமாறு,

| Sl No | Capacity | Spec No | No of firms Participated | No of Firms quoted the same rate |
|---|---|---|---|---|
| 1 | 500/11 | M25/11-12 | 20 | 17 |
| 2 | 100/22 | M19/11-12 | 36 | 26 |
| 3 | 250/11 | M39/11-12 | 33 | 24 |
| 4 | 100/11 | M34/12-13 | 34 | 26 |
| 5 | 500/22 | M02/13-14 | 13 | 13 |
| 6 | 100/11 | M27/13-14 | 34 | 32 |
| 7 | 200/22 | M32/13-14 | 25 | 23 |
| 8 | 250/11 | M27/14-15 | 45 | 28 |
| 9 | 250/11 | M-54/17-18 | 36 | 16 |
| 10 | 63/22 | M-56/17-18 | 31 | 12 |
| 11 | 63/11 | M-55/17-18 | 27 | 9 |
| 12 | 63/11 | M-38/19-20 | 40 | 11+13* |
| 13 | 100/11 | M-36/19-20 | 44 | 12+21* |
| 14 | 250/11 | M-43/20-21 | 35 | 1+34 |
| 15 | 25/11 | M-35/20-21 | 34 | 34 |
| 16 | 100/22 | M-01/20-21 | 33 | 15+2* |
| 17 | 200/22 | M-02-20-21 | 37 | 13+14* |
| 18 | 250/11 | M-08/21-22 | 34 | 34 |
| 19 | 500/11 | M-11/21-22 | 26 | 26 |

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | 100/11 | M-13/22-23 | 31 | 1+30 |

**(* நிறுவனங்கள் இரு கூறுகளாக பிரிந்து ஒவ்வொரு பிரிவும் ஒரே மாதிரியான விலையை அந்தந்த கூறுகளில் கோரியுள்ளது)**

3. மின்மாற்றிகள் தயாரிக்கும் அனைத்து நிறுவனங்களும், சென்னையிலிருந்து நாகர்கோவில் வரை உள்ள 44 மின் பகிர்மான வட்டங்களுக்கு மின்மாற்றிகளை எடுத்து சென்று வழங்குவதால், அவை சரக்கு வாகன கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. மேலும், மேற்காணும் நிறுவனங்கள் உள்ளூரிலேயே பல வருடங்களாக இயங்கி வருவதால், அவர்களுக்கு மற்ற நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் குறித்து தெரிய வாய்ப்புள்ளது.

4. ஒப்பந்த விலைப்புள்ளிகள் அனைத்தும் கணினி மூலமாகவே பெறப்படுகிறது. எனவே, ஒன்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் ஒரே விலைப்புள்ளியை சமர்ப்பித்திருந்தாலும், தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி வெளிப்படைத்தன்மை சட்டம்–1998 (Tamil Nadu Tender Transparency Act 1998), விதி எண்.10(5)–ன்படி தமிழக மின்வாரியத்திற்குத் தேவையான மின்மாற்றிகளை தகுதி வாய்ந்த அனைத்து சிறு, குறு நிறுவனங்களுக்கும் பிரித்து வழங்கி மேற்படி விதிகளின் படி கொள்முதல் ஆணை அளிக்கப்பட்டுள்ளது.

5. மின்மாற்றி தயாரிக்கும் நிறுவனங்கள் ஒரே மாதிரி விலைப்புள்ளி கோருவது கடந்த இரு ஆண்டுகளில் நிகழும் நிகழ்வுகள் அல்ல. இந்த நடைமுறை, கடந்த 10 வருடங்களுக்கும் மேலாகவே பின்பற்றப்பட்டு வருகிறது.

6. மேலும், ஜெம் போர்டலில் குறிப்பிட்ட விலையை விட அதிக விலைக்கு மின்மாற்றிகள் வாங்கியுள்ளதாக புகாரில் கூறியுள்ளது. ஒப்பந்த புள்ளிகளை பரிசீலனை செய்யும்போது அன்றைய தேதியில் தமிழ்நாடு மின்சார வாரிய விவரக் குறியீடுகளுடன்

பெரும்பான்மையான விவரக் குறியீடுகளுடன் ஒத்து வரும் ஜெம் போர்டல் விவரக் குறியீடுகள் கொண்ட விலையை ஒப்பிட்டுத்தான் ஒப்பந்த புள்ளி வழங்கப்படுகிறது. ஆனால், இன்றைய தேதியில் ஜெம் போர்டல்விலையை எடுத்து ஒப்பீடு செய்துள்ளது சரியான நடைமுறையாகாது.

7. தமிழ்நாடு மின்சார வாரியம் கொள்முதல் செய்த விலை விவரங்களும், ஜெம் போர்டல் விலை விவரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| Sl.No | Spec. No | Capacity of DT | Awarded rate | Qty in Nos | Costing rate arrived in Rs. | GeM Portal rate in Rs. | Diff of awarded rate and GeM rate | Diff % with GeM |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | M.14/ 22-23 | 200KVA/ 22KV | 672582 | 1000 | 833438 | 685058 (31.1.23) | -12476 | -2 |
| 2 | M.13/ 22-23 | 100KVA/ 11KV | 413590 | 3750 | 527168 | 405000 (19.10.22) | 8590 | 2 |
| 3 | M.12/ 21-22 | 100KVA/ 22KV | 446040 | 2500 | 422340 | 430438 (7.2.22) | 15602 | 4 |
| 4 | M.11/ 21-22 | 500KVA/ 11KV | 1249800 | 800 | 1196631 | 1193873 (27.1.22) | 55927 | 5 |
| 5 | M.10/ 21-22 | 63KVA/ 22KV | 318100 | 7000 | 327945 | 305476 (27.1.22) | 12624 | 4 |
| 6 | M.09/ 21-22 | 63KVA/ 11KV | 296860 | 10000 | 287490 | 301428 (27.1.22) | -4668 | -2 |
| 7 | M.08/ 21-22 | 250KVA/ 11KV | 729600 | 2000 | 749509 | 675812 (2.1.22) | 53788 | 8 |

8. மேலே, வரிசை எண்.2–ல் கூறப்பட்டுள்ள மின்மாற்றிகள் கேரள மாநிலத்தில் கொள்முதல் செய்யப்பட்ட விலை ரூ.2,27,681/– எனவும், அதே மின்மாற்றி தமிழ்நாடு மின்சார வாரியம் ரூ.4,13,590/– கொள்முதல் செய்துள்ளது எனவும், இதன் மூலம் ரூ.40,27,33,000/– இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கேரள மாநிலத்தில் கொள்முதல் செய்யப்படும் மின்மாற்றிகளில் அலுமினியம் மின்சுருள்

பயன்படுத்தப்படுகிறது. ஆனால், தமிழ்நாடு மின்சார வாரியம் கொள்முதல் செய்யும் மின்மாற்றிகளில் காப்பர் மின்சுருள் பயன்படுத்தப்படுகிறது. அலுமினியம் மின்சுருளுக்கு பதிலாக காப்பர் மின்சுருளை பயன்படுத்தும் பொழுது ஒரு மின்மாற்றிக்கு கூடுதலாக ரூ.1,66,903.80 செலவாகிறது (அலுமினிய் மின்சுருளின் விலையையும் சேர்த்து). இதன் மூலம், கேரள மாநிலத்தில் கொள்முதல் செய்யப்படும் ஒரு மின்மாற்றி தமிழ்நாடு மின்வாரிய விபரக் குறிப்பீடு படி ஒப்பிடப்பட்டால் அதன் விலை ரூ. 3,94,585/– ஆகும். தமிழ்நாடு மின்சார வாரியம் ரூ.4,13,590/–க்கு கொள்முதல் செய்துள்ளது. ஆயினும், தமிழ்நாடு மின்சார வாரியத்தால் கொள்முதல் செய்யப்படும் மின்மாற்றிகளின் உத்தரவாத காலம் 5 வருடங்கள் ஆகும். கேரளா மாநிலத்தில் கொள்முதல் செய்யப்படும் மின்மாற்றிகளுக்கான உத்தரவாதக் காலம் 3 வருடங்கள் ஆகும். தமிழ்நாடு மின்சார வாரியம் கொள்முதல் செய்யும் மின்மாற்றிகளின் விவரக் குறியீடு முற்றிலும் தனித்துவம் வாய்ந்தது. ஆகவே, கேரள மாநிலத்தில் கொள்முதல் செய்யும் மின்மாற்றிகளோடு ஒப்பீடு செய்ய இயலாது.

9. மேலே உள்ள அட்டவணையில் வரிசை எண்.3–ல் உள்ள மின்மாற்றிகளுக்கான கொள்முதல் விலையை புகாரில் வரிசை எண்.2–ல் உள்ள கொள்முதல் விலையை கொண்டே கணக்கீடு செய்துள்ளது தவறானதாகும். இரு மின்மாற்றிகளுக்கும் திறனில் மிகப் பெரிய வேறுபாடு உள்ளது.

10. மேலே உள்ள அட்டவணையில் வரிசை எண்.4–ல் உள்ள மின்மாற்றிகளுக்கான கொள்முதல் விலையை புகாரில் இராஜஸ்தான் மாநிலத்தில் கொள்முதல் செய்யும் மின்மாற்றிகளுடன் ஒப்பீடு செய்து

ரூ.34.17 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இராஜஸ்தான் மாநிலத்தில் கொள்முதல் செய்யப்படும் மின்மாற்றிகளின் விவரக் குறியீடுகளும், தமிழ்நாடு மின்சார வாரியம் கொள்முதல் செய்யும் மின்மாற்றிகளின் விவரக் குறியீடுகளும் வெவ்வேறாக உள்ளது. உதாரணமாக, எல்.வி. டெர்மினல், காப்பர் சுருள் அளவு, உச்சபட்ச கொதிநிலை ஏற்பு திறன் ஆகியவற்றில் மாறுபாடு உள்ளது. மேலும், தமிழ்நாடு மின்சார வாரியத்தால் கொள்முதல் செய்யப்படும் மின்மாற்றிகளின் உத்தரவாத காலம் 5 வருடங்கள் ஆகும். இராஜஸ்தான் மாநிலத்தில் கொள்முதல் செய்யப்படும் மின்மாற்றிகளுக்கான உத்தரவாதக் காலம் 3 வருடங்கள் ஆகும். எனவே, சமநிலையில் உள்ள விவரகுறியீடுகளோடுதான் ஒப்பீடு செய்வது பொருத்தமானதாக இருக்கும்.

11. மேலே உள்ள அட்டவணையில் வரிசை எண்.5–ல் உள்ள மின்மாற்றிகளுக்கான கொள்முதல் விலையை புகாரில் இராஜஸ்தான் மாநிலத்தில் கொள்முதல் செய்யும் மின்மாற்றிகளுடன் ஒப்பீடு செய்து ரூ.96.00 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது. இராஜஸ்தான் மாநிலத்தில் கொள்முதல் செய்யப்படும் மின்மாற்றிகளில் அலுமினியம் மின்சுருள் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், தமிழ்நாடு மின்சார வாரியம் கொள்முதல் செய்யும் மின்மாற்றிகளில் காப்பர் மின்சுருள் பயன்படுத்தப்படுகிறது. அலுமினியம் மின்சுருளுக்கு பதிலாக காப்பர் மின்சுருளை பயன்படுத்துவதால், விலையை ஒப்பிடும்பொழுது சரியான அளவிலேயே உள்ளது. ஆனால், கர்நாடக மாநிலத்தில் இதே திறனுள்ள மின்மாற்றிகளை ரூ.2,75,175/– என்ற விலையில் மூன்று வருட உத்தரவாதத்துடன் கொள்முதல் செய்துள்ளனர். தமிழ்நாடு

மின்சார வாரியம் 5 வருட உத்தரவாதத்துடன் ரூ. 3,18,100/– விலையில் கொள்முதல் செய்துள்ளது. ஆகவே, இரு வருடங்கள் கூடுதலான உத்தரவாதத்துடனும், கொள்முதல் விலையை திருப்பி செலுத்தும் காலத்தினை கணக்கில் கொண்டால், தமிழ்நாடு மின்சார வாரியம் கொள்முதல் செய்யும் விலை எந்தவிதத்திலும் அதிகப்படியானதாக இல்லை என்பது தெரிகிறது.

12. மேலே உள்ள அட்டவணையில் வரிசை எண்.6–ல் உள்ள மின்மாற்றிகளுக்கான கொள்முதல் விலையை புகாரில் இராஜஸ்தான் மாநிலத்தில் கொள்முதல் செய்யும் மின்மாற்றிகளுடன் ஒப்பீடு செய்து ரூ.115.90 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது. இராஜஸ்தான் மாநிலத்தில் கொள்முதல் செய்யப்படும் மின்மாற்றிகளில் அலுமினியம் மின்சுருள் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், தமிழ்நாடு மின்சார வாரியம் கொள்முதல் செய்யும் மின்மாற்றிகளில் காப்பர் மின்சுருள் பயன்படுத்தப்படுகிறது. அலுமினியம் மின்சுருளுக்கு பதிலாக காப்பர் மின்சுருளை பயன்படுத்தும் பொழுது ஒரு மின்மாற்றிக்கான விலை ரூ.2,64,179/– ஆகும், தமிழ்நாடு மின்சார வாரியம் ரூ.2,96,860/– க்கு கொள்முதல் செய்துள்ளது. ஆயினும், தமிழ்நாடு மின்சார வாரியத்தால் கொள்முதல் செய்யப்படும் மின்மாற்றிகளின் உத்தரவாத காலம் 5 வருடங்கள் ஆகும். இராஜஸ்தான் மாநிலத்தில் கொள்முதல் செய்யப்படும் மின்மாற்றிகளுக்கான உத்தரவாதக் காலம் 3 வருடங்கள் ஆகும். அதுமட்டுமல்லாது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் விவரக் குறியீடுகள் மற்ற மாநிலத்தில் பயன்படுத்தப்படும் மின்மாற்றிகளின் விவரக் குறியீடுகளோடு ஒப்பீடு செய்ய இயலாத அளவில் உயர்ந்ததாக உள்ளது.

13. மேலே உள்ள அட்டவணையில் வரிசை எண்.7–ல் உள்ள மின்மாற்றிகளுக்கான கொள்முதல் விலையை புகாரில் இராஜஸ்தான் மாநிலத்தில் கொள்முதல் செய்யும் மின்மாற்றிகளுடன் ஒப்பீடு செய்து ரூ.48.54 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது. புகாரில் ஒப்பீடு செய்துள்ளது 315 கே.வி,ஏ ஆகும். மின்மாற்றியின் விலையை ஒப்பிடும்பொழுது அதற்கு இணையான திறன் உள்ள மின்மாற்றிக்கான விலையுடன் மட்டுமே ஒப்பீடு செய்ய இயலும். ஆகவே, புகாரில் ஒப்பீடு செய்துள்ளது தவறானதாகும்.

14. மேற்காணும் அட்டவணையிலிருந்து தமிழ்நாடு மின்சார வாரியத்தால் கொள்முதல் செய்யப்பட்ட மின்மாற்றிகள் ஜெம் போர்டலில் குறிப்பிட்ட விலையை விட மிக அதிக விலைக்கு கொள்முதல் செய்யப்படவில்லை என்பது தெரிய வரும். மேலும், ஜெம் போர்டலை விட அதிகபட்சமாக 8 சதவீதம் மட்டுமே அதிக விலைக்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அதே நேரத்தில், ஜெம் போர்டலை விட 2 சதவீதம் குறைவாகவும் மின்மாற்றிகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும், ஜெம் போர்டலை விட மிகக்குறைந்த அளவிலான விலை உயர்வில் கொள்முதல் செய்யப்பட்டதற்கான காரணங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| i. | ஒவ்வொரு முறையும் மின்மாற்றிகள் கொள்முதல் செய்ய முடிவெடுக்கும்போது, தமிழ்நாடு மின்வாரியத்தில் பணிபுரியும் பொறியாளர்களைக் கொண்டு, அம்மின்மாற்றிகள் தயாரிப்பதற்கான மூலப்பொருட்கள் முதல் அம்மின்மாற்றிகள் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 44 மின் பகிர்மான வட்டங்களுக்கும் வழங்குவதற்கான போக்குவரத்து செலவு உட்பட அனைத்தையும் |

| | |
|---|---|
| | உள்ளடக்கிய ஒரு அடக்க விலை (Cost) நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அடக்க விலை சற்று கூடுதலாக உள்ளது. |
| ii. | தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஒரு மின்மாற்றிக்கான விவரக் கூறுகள் (Specifications) ஜெம் போர்டல் விவரக் கூறுகளை விட உயர்ந்தவையாக இருக்கிறது. உதாரணமாக, உத்தரவாத காலம், பணம் செலுத்தும் கால அளவு, கொதிநிலை ஏற்புத் திறன் அளவு, போன்ற காரணிகளால், ஜெம் போர்டல் விலையை விட தமிழ்நாடு மின்சார வாரியம் கொள்முதல் செய்யும் விலை சற்று கூடுதலாக உள்ளது. |
| iii. | ஜெம் போர்டல் விவரக்கூறின்படி, மின்மாற்றிகள் வழங்கும் நிறுவனம், மின்மாற்றிகள் வழங்கிய தேதியிலிருந்து, மூன்று வருடத்திற்கு மட்டும் உத்தரவாதம் வழங்கும், தமிழ்நாடு மின்சார வாரிய விவரக்கூற்றின்படி இந்நிறுவனங்கள் 5 வருடங்களுக்கு மின்மாற்றிகளுக்கான உத்தரவாதம் வழங்க வேண்டியுள்ளது. ஆகவே, தமிழ்நாடு மின்சார வாரியம் கொள்முதல் செய்யும் மின்மாற்றிகளின் விலை சற்றுக் கூடுதலாக இருக்கிறது. |
| iv. | ஜெம் போர்டல் மூலம் கொள்முதல் செய்தால் உடனடியாக அதற்கான விலையை ரொக்கமாக வழங்கினால் மட்டுமே, கொள்முதல் செய்ய இயலும். ஆனால், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின்மாற்றிகள் வழங்கும் நிறுவனங்கள், எவ்வித முன்பணமும் இன்றி மின்மாற்றிகளை வழங்குகிறது. முழுமையாக மின்மாற்றிகளை வழங்கியவுடன்தான் அதற்கான |

| | |
|---|---|
| | தொகையை வழங்குகிறது. |
| v. | மற்ற மாநிலங்களில் அம்மாநில அரசுகள் கொள்முதல் செய்யும் மின்மாற்றிகளின் விவர குறியீடுகள், மின்மாற்றிகள் தயாரிக்கும் நிறுவனங்கள் வழங்கும் குறியீடுகளின் அடிப்படையிலேயே கொள்முதல் செய்யப்படுகிறது. மாறாக, தமிழ்நாடு மின்சார வாரியத்தால் கொள்முதல் செய்யும் மின்மாற்றிகள், தமிழ்நாடு மின்சார வாரியத்தால் நிர்ணயம் செய்யப்படும் விவரக் குறியீடுகளின் அடிப்படையிலேயே மின் மாற்றிகள் தயாரிக்கும் நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. |

16. மேலும், டெஸ்லா என்ற நிறுவனத்திற்கு 1875 எண்ணம் 250 கே.வி.ஏ மின்மாற்றிகள் வினியோகம் செய்வதற்கு கொள்முதல் (ஒப்பந்த புள்ளி எண். M-43/2020-21) ஆணை (ஒரு மின்மாற்றியின் விலை ரூ.5,32,640/-) வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனம் உரிய காலத்திற்குள் பிணைத் தொகை செலுத்தாத காரணத்தால், அந்நிறுவனத்திற்கு வழங்கிய கொள்முதல் ஆணை இரத்து செய்யப்பட்டு, 2000 மின்மாற்றிகள் கொள்முதல் செய்ய புதிய ஒப்பந்த புள்ளி (M-08/2021-22) கோரப்பட்டது. மேற்காணும் மின்மாற்றிகள், ஒரு மின்மாற்றியின் விலை ரூ.7,29,600/-க்கு 33 நிறுவனங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டது. ஆகவே, இக்கொள்முதலிலும் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை.

17. புகாரில் மற்ற மாநிலங்களோடு மின்மாற்றிகளின் கொள்முதலை ஒப்பீடு செய்து ரூ.397.37 கோடி இழப்பு ஏற்பட்டதாக

கூறியுள்ளது. புகாரில் மின்மாற்றிகளின் வேறுபட்ட விவரக் குறியீடுகளின் அடிப்படையிலும், வேறுபட்ட மூலப்பொருட்களின் அடிப்படையிலும் உதாரணமாக காப்பர் மின்சுருள் கொண்ட மின்மாற்றிகளோடு ஒப்பிடு செய்யாமல் அலுமினியம் மின்சுருள் கொண்ட மின்மாற்றிகளோடு ஒப்பீடு செய்துள்ளது. மேலும், கீழ்கண்ட காரணங்களினால் புகாரில் நிர்ணயம் செய்த விலையானது தவறாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1. **புகாரில் ஜெம் போர்ட்டல் விலையை ஜூன், 2023–ம் மாதத்தில் கணக்கில் கொண்டுள்ளது. மின்சார வாரியம் ஒப்பந்த புள்ளிகளை பரிசீலனை செய்யும் காலத்தில் மின்சார வாரியத்தின் விவர குறியீட்டுடன் ஒத்து வரும் ஜெம் போர்டல் விலையுடன் ஒப்பீடு செய்யப்பட்டு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.**
2. **புகாரில் மின்மாற்றிகளின் விலையை கணிக்கும்போது அலுமினிய மின்சுருள் பயன்படுத்தப்படும் மின்மாற்றிகளின் விலையை அடிப்படையாக வைத்து, தாங்களாகவே 25 சதவீதம் விலையை அதிகரித்து தாமிர மின்சுருள் பயன்படுத்தப்படும் மின்மாற்றிகளின் விலையோடு ஒப்பீடு செய்திருப்பது தவறானதாகும்.**
3. **அலுமினிய மின்சுருளை விட தாமிர மின்சுருள் விலை மூன்று மடங்கு அதிகமாகும். அலுமினியம் மின்சுருள் உபயோகிக்கும் மின்மாற்றிகளின் விவர குறியீடுகளும் காப்பர் மின்சுருள் உபயோகிக்கும் மின்மாற்றிகளின் விவர குறியீடுகளும் வெவ்வேறானவை. மேலும், இரு மின்மாற்றிகளின், ஆயுட்காலம், பழுது விகிதம் ஆகியவற்றை ஒப்பிடும்போது,**

காப்பர் மின்மாற்றிகளின் தரம் மிகவும்அதிகம் மற்றும் இதன் ஆயுட்காலம் 25 முதல் 30 ஆண்டுகள் வரை அதிகமான பழுதுகள் இன்றி இயங்கக்கூடியது.

4. புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள கேரளா மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் கொள்முதல் செய்யப்படும் மின்மாற்றிகள் மூன்று வருடகால உத்திரவாதத்துடன் மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் மின்மாற்றிகள் ஐந்து வருடகால உத்தரவாதத்துடன் கொள்முதல் செய்யப்படுகிறது. மேலும், தமிழ்நாடு மின்சார வாரியம் கொள்முதல் செய்யும் மின்மாற்றிகளின் உத்தரவாத காலம், பணம் செலுத்தும் கால அளவு, கொதிநிலை ஏற்புத் திறன் அளவு, காப்பர் மின்சுருள் அளவு போன்ற காரணிகளால், மற்ற மாநிலங்களில் கொள்முதல் செய்யும் மின்மாற்றிகளின் விலைகளோடு ஒப்பிட இயலாது.
5. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஒரே நிறுவனமாக இயங்குவதால் தமிழ்நாடு முழுவதும் உள்ள 44 மின் பகிர்மான வட்டங்களுக்கும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மின்மாற்றிகளை கொண்டு செல்ல வேண்டியுள்ளதால், அதற்குண்டான செலவையும் கொள்முதல் விலையுடன் சேர்த்து குறிப்பிடப்படுகிறது.
6. மின்வாரிய Cost Data–வில் உள்ள விலை ஒப்பந்த புள்ளி நிர்ணயம் செய்யும் காலத்திற்கு ஏற்ப திருத்தம் செய்யப்படவில்லை. ஒப்பீடு செய்யப்பட்ட மாநில மின்வாரியங்களின் தொழில் நுட்ப குறிப்புகளை விட தமிழ்நாடு

**மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக தொழில்நுட்ப குறிப்புகள் மேம்பட்டு உள்ளன.**

**மேற்காணும் காரணங்களாலும், நீண்ட கால பயனை கருத்தில்கொண்டு காப்பர் மின்சுருள், 5 வருட உத்தரவாதம், மின்சார வாரியம் நிர்ணயம் செய்யப்படும் விவரக் குறியீடுகளின் அடிப்படையிலேயே நிறுவனங்கள் மின்மாற்றிகளை உற்பத்தி செய்து வழங்குவதால், தமிழ்நாடு மின்சார வாரியம் கொள்முதல் செய்யும் மின்மாற்றிகளின் தரம் உயர்வாக இருக்கிறது.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in